**அசல் வழக்கு எண். 148 / 2010 - வா.சா.1. பெயர் - சாந்தி - நாள் - 20.01.2020.**

**குறுக்கு விசாரணை (தொடர்ச்சி):**

பி.சா.ஆ.1 இல் பி அட்டவணையில் எனக்கும் என் 2 சகோதரிகளுக்கும் ஒதுக்கப்பட்ட கொக்குளப்பி கிராமம் சர்வே எண். 15/7 இல் உள்ள 9 சென்டை விற்றுவிட்டோமா என்றால் இல்லை. அந்த 9 சென்டில் எனக்குப் பாத்தியப்பட்ட 3 சென்டை 3ம் நபர்களுக்கு கிரையம் செய்துவிட்டேன் என்றால் தவறு. அதேபோல பி.சா.ஆ.1 இல் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சி அட்டவணைச் சொத்தை அவர் முழுவதும் விற்றுவிட்டாரா அல்லது தற்போதும் வைத்துள்ளாரா என்றால் எனக்குத் தெரியாது. வாதிகளாகிய நாங்கள் சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதாகக் காட்ட பட்டா மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இல்லை. 1ம் வாதியின் கணவர் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். வழக்குரையில் மொத்தம் எத்தனை லக்கச் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. வழக்கு தாக்கல் செய்ய 1ம் வாதியின் கணவர்தான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னாரா என்ற கேள்விக்கு சாட்சி ஆமாம் என்று சொல்லிவிட்டு, மீண்டும் நாங்களும் சொன்னோம் என்று மாற்றிக் கூறுகிறார். வழக்குரை சொத்து விபரங்கள் முழுவதையும் நானும் 1ம் வாதியும் சொன்னோம். 1ம் வாதியை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். வா.சா.ஆ.1 படி என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் குறித்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஐ எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்று 1ம் வாதியை விசாரித்தால் தெரியும். வா.சா.ஆ.1 இல் என் தகப்பனாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. என் பாட்டி நல்லம்மாளுக்கு வா.சா.ஆ.1 படி என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நல்லம்மாளின் சொத்துக்களை அவர் இறந்த பிறகு யார் விற்றார்கள் என்று எனக்குத் தெரியாது. தாவா 1ம் லக்கச் சொத்தின் புல எண், விஸ்தீரணம், அந்த சொத்து உள்ள ஊர் ஆகியவற்றை பற்றி எனக்குத் தெரியாது. தாவா 1ம் லக்கச் சொத்து குறித்து, பாகம் கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா 1ம் லக்கச் சொத்தை என் பெற்றோர் இருக்கும்போதே 1 முதல் 3 பிரதிவாதிகள் 3 ஆம் நபர்களுக்கு விற்றுவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. எங்கள் குடும்பத்தில் எவ்வளவு சொத்து தற்போது உள்ளது என்றும், ஏற்கனவே எவ்வளவு விற்றுவிட்டார்கள் என்றும் எனக்குத் தெரியாது. தாவா 2ம் லக்கச் சொத்து எந்த கிராமத்தில், எந்த புல எண்ணில், எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் எவ்வளவு சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் விற்றார்கள் என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 படி என் தகப்பனாருக்கு ஒதுக்கப்படாத சொத்துக்களையும் சேர்த்து, இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 4 மற்றும் 5 லக்கச் சொத்துக்கள் என் தகப்பனாருக்கு வா.சா.ஆ.1 படி ஒதுக்கப்படாத சொத்துக்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 படி என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பல சொத்துக்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 3ம் லக்கச் சொத்தை வாதிகளாகிய நாங்கள் ஒரு முத்துராமலிங்கம் என்பவருக்கு, 23.12.2016 இல் கிரையம் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தினை நாங்கள் செய்துவிட்டு எந்தவித உரிமையும் இல்லாமல் 1ம் பிரதிவாதியின் மனைவியான 7ம் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என் எண்ணத்தில், மேற்படி கிரையத்தையே நாங்கள் மறைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும், அந்தக் கிரையத்தின் அடிப்படையில், கிரையதாரருக்கும் எந்த உரிமையும் ஏற்படுவதில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கிரையப் பத்திரத்தில் உள்ள புகைப்படம் என்னுடையதல்ல. தாவா 4 மற்றும் 5 லக்கச் சொத்துக்கள் எந்தக் கிராமத்தில், எந்தப் புல எண்ணில், எவ்வளவு விஸ்தீரத்தில் உள்ளது என்று தெரியாது. எங்களுக்குப் பாத்தியப்பட்ட விநாயகர் கோவிலுக்கு கிழக்குப் புறமும் மேற்குப் புறமும் காலி இடங்கள் உள்ளன. அந்த காலி இடத்தில் பி.சா.ஆ-1 படி என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின், ஒருபகுதியை என் தகப்பனார் என் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 4ம் லக்கச் சொத்துக்கள் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் எனக்குத் தெரியாது. தாவா 4ம் லக்கச் சொத்தை என் தகப்பனார் வீட்டு மனைகளாகப் பிரித்து 2002 லேயே வா.சா.ஆ.23 முதல் 26 வரையான பத்திரங்கள் மூலமாக கிரையம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 முதல் 26 வரையான பத்திரங்களை நான்தான் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.23 முதல் 26

பத்திரங்களை காட்டி அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று, பலமுறை கேட்டும் சாட்சி பதில் அளிக்காமல் தனக்கு பாகம் வேண்டும் என்பதற்கான ஆவணங்களைத் தாக்கல் செய்திருப்பதாக கூறுகிறார்.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார் / கையொப்பமிட்டார்.**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**மதுரை.**